போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 28, 1922.

ந. 6.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலே, 1922-ம் வூ மார்ச்மீ 28உ. [விலே, 3 பை.

இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டு களும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளேச் சேர்ந்த 18-வது விதியின்படி பிர சுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம் வூ பெப்ரவரிமீ 7உ சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 8 of 1922.

1922-ம் வூத்து 8-வது நெ.

A BILL FURTHER TO AMEND THE CODE OF CIVIL PROCEDURE, 1908.

1908-ம் வூத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1908-ம் வூத்து 5-வது ஆக்ட்.

1908-ம் வூத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத் தைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்ன வென்ருல் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, ஸிவில் ப்ரொஸீஜர் கோடைக்குறித்த (திருத்துவதற்கான) 192 -ம் வூத்து ஆக்டென்று சொல்லலாம்.

1908-ம் வூத்து 5-வது ஆக்ட், 3-வது அதிகாரத் தைச் சேர்ந்த 4-வது விதி யிற்கண்ட (3) குறிப்பிட்ட உபவிதியில் திருத்தம்.

2. 1908-ம் வூத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் முதல் ஷெட்யூல், 3-வது அதிகாரத்தைச் சேர்ந்த 4-வது விதியிற்கண்ட (3) குறிப்பிட்ட உபவிதிக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

" யாதொரு ஹைகோர்ட்டிலாவது சீவ் கோர்ட்டிலாவது நியாயவாதியாய்ப் பிரவர்த்திக்க அர்ஹராயுள்ள எந்த நியாயவாதியையும், அந்தப்படி பிரவர்த்திக்கும்படி அவருக்கு

அதிகாரம் கொடுத்திருக்கிற யாதொரு தஸ்தவேஜை ஹாஜர்ப்படுத்தும்படி கேட்கக் கூடாது.''

பம்பாய் 1920-ம்௵த்து 17-வது ஆக்ட் 10-வது பிரிவில் திருத்தம்.

3. 1920-ம்௵த்து பம்பாய் ப்ளீடர்களாக்ட் 10-வது பிரிவானது இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாயிருக்கிறமட்டில் அது ஹைகோர்ட்டைச் சேர்ந்த வக்கீல்களுக்குப் பிரயோகப்படமாட்டாது.

பம்பாய் 1920-ம்௵த்து 17-வது ஆக்ட்

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

வகாலத்துநாமாவாவது பவர் ஆவ் அட்டர்னி என்னும் அதிகாரபத்திரமாவது இல்லாமல் ஹாஜராகும் உரிமையை பாரிஸ்டர்களும் சில அட்வொகேட்டுகளும் மாத்திரமே இதுவரையில் அனுபவித்துவந்தார்கள். இந்த உரிமை ஹைகோர்ட்டுகளையும் சீவ் கோர்ட்டுகளையும் சேர்ந்த நியாயவாதிகள் எல்லோருக்கும் ஏற்படும்படி செய்வதே உத்தேசிக்கப்பட்ட ஷை திருத்தத்தின் நோக்கமாகும்.

அலஹாபாத்,

1921-ம்௵ டிஸெம்பர்௴ 19௳.

கிர்தரிலால் அகர்வாலா.

எச். மான்க்ரீப் ஸ்மித்,

இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,

Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.